**FINAL ANSWER KEY**

| | |
|---|---|
| Question Paper Code: | 114/2026/OL |
| Category Code: | 421/2025 |
| Exam: | Boat Lascar |
| Date of Test | 04-06-2026 |
| Department | Kerala State Water Transport |
| Language: | Tamil |

Question1:-

தேசிய பாய்மரப் படகோட்டுதல் தினம் (National Sailing Day) என்பது

A:-ஜனவரி 1

B:-ஏப்ரல் 1

C:-ஏப்ரல் 5

D:-நவம்பர் 1

Correct Answer:- Option-C

Question2:-

இந்தியாவின் முதல் பெண் குடியரசுத் தலைவர் யார் ?

A:-திரௌபதி முர்மு

B:-இந்திரா காந்தி

C:-பிரதிபா பாட்டில்

D:-விஜயலட்சுமி பண்டிட்

Correct Answer:- Option-C

Question3:-

கொச்சியில் உள்ள 'வெலிங்டன்தீவு' (Wellington Island) என்ற தீவை உருவாக்கியவர் யார் ?

A:-சர் ராபர்ட் பிரிஸ்டோ

B:-லார்ட் வெல்லஸ்லி

C:-வாஸ்கோட காமா

D:-ஸ்ரீ சித்திரைத் திருநாள்

Correct Answer:- Option-A

Question4:-

ஒரு நீர்வாகனத்தின் (படகு/கப்பல்) மிக முன்பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

A:-prow

B:-main deck

C:-port

D:-stern

Correct Answer:- Option-A

Question5:-

நீரில் மிதக்கக்கூடிய, உயிரைக்காக்கும் வட்டவடிவ சாதனம் எது ?

A:- உயிர் காக்கும் அங்கி (Life jacked)

B:- உயிர் காக்கும் வளையம் (Life buoy)

C:-உயிர் காக்கும் மிதவைப் படகு (Life raft)

D:- உயிர் காக்கும் படகு (Lifeboat)

Correct Answer:- Option-B

Question6:-

படகின் வலது பக்கத்தில் எந்த நிற ஒளி காட்டப்படுகிறது ?

A:-சிவப்பு

B:-பச்சை

C:-மஞ்சள்

D:-நீலம்

Correct Answer:- Option-B

Question7:-

படகுகள் மற்றும் கப்பல்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தப் பயன்படுவது எது ?

A:-உந்துவிசைச் சுழலி (Propeller)

B:-திசைமாற்றி (Rudder)

C:-அடிதளம் (Keel)

D:-படகு/கப்பலின் உடல் பகுதி (Hull)

Correct Answer:- Option-B

Question8:-SART என்பதன் முழு வடிவம் என்ன ?

A:-Search and Rescue Transponder

B:-Search and Rescue Transport

C:-Search and Rescue Service

D:-Search and Rescue Team

Correct Answer:- Option-A

Question9:-

கயிற்றின் முனை பிரிந்து விடாமல் தடுக்கப் பின்வருவனவற்றில் எது பயன்படுத்தப்படுகிறது ?

A:-கயிற்று முனை முடிச்சு (Whipping)

B:-படகுத்தரைப்பகுதி (Bilge)

C:-புகைபோக்கி (Funnel)

D:-திசைமாற்றிக் கூடம் (Wheelhouse)

Correct Answer:- Option-A

Question10:-

மாநிலத் துறைமுகத் துறை அமைச்சர் யார் ?

A:-சி.பி. ஜான்

B:-வி.டி. சதிஷன்

C:-அனுப் ஜேகப்

D:-பி.கெ. குன்னாளிகுட்டி

Correct Answer:- Option-B

Question11:-

ஒரு நீர்வாகனத்தின் வலது பக்கம் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

A:-Stern

B:-Stem

C:-Port side

D:-Starboard side

Correct Answer:- Option-D

Question12:-

கடற்பயணத்தின்போது கண்டிப்பாகக் காட்டப்பட வேண்டிய விளக்குகள் எவை ?

A:- முன்புறத் தலைவிளக்கு (Headlight forward)

B:-பக்கவாட்டு விளக்குகள் (Side lights)

C:-பின்புற விளக்குகள்(Stern lights aft)

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-D

Question13:-

ஒரு கப்பல் நீரில் மூழ்கியிருக்கும் அளவானது எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

A:-நீர்மட்டம் (Draft)

B:-ஆழம் (Depth)

C:-உயரம் (Height)

D:-மேல்தளம் (Deck)

Correct Answer:- Option-A

Question14:-

ஒரு நீர்வகனத்தின் வெளிப்புற அமைப்பு __________ என்று அழைக்கப்படுகிறது.

A:-உடல்/கூடு (Hull)

B:-மேல்தளம் (Deck)

C:- துளை/வழி(Hatch)

D:-அடிதளம்(Keel)

Correct Answer:- Option-A

Question15:-

கேரள மாநிலத்தில் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து வாகனங்களுக்கான சான்றிதழ்களை வழங்குபவர் யார் ?

A:-மோட்டார் வாகனத் துறை

B:-மாநில நீர்வழிப் போக்குவரத்துத் துறை

C:-கேரள கடல்சார் வாரியம்

D:-இவற்றுள் ஏதுமில்லை

Correct Answer:- Option-C

Question16:-

கேரளாவின் முதல் முதலமைச்சர் யார் ?

A:-ஈ.கே. நாயனார்

B:-கே. கருணாகரன்

C:-ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட்

D:-சி. அச்சுத மேனன்

Correct Answer:- Option-C

Question17:-

கேரளப் பிறவி தினம் என்பது

A:-ஆகஸ்ட் 15

B:-ஜனவரி 1

C:-ஜனவரி 26

D:-நவம்பர் 1

Correct Answer:- Option-D

Question18:-

கொச்சின் கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட முதல் விமானம் தாங்கி கப்பல் எது ?

A:-M.V. ராணி பத்மினி

B:-M.T. மோதிலால் நேரு

C:-INS விக்ராந்த்

D:-INS விராட்

Correct Answer:- Option-C

Question19:-

உடலில் அணியக்கூடிய உயிர்காக்கும் சாதனம் எது ?

A:-உயர்காக்கும் வளையம் (Life buoy)

B:-உயர்காக்கும் மிதவை (Life raft)

C:-உயர்காக்கும் உடை (Life jacket)

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-C

Question20:-

'சாதி அல்லது மத வெறுப்பு ஏதுமின்றி, அனைவரும் சகோதரத்துவத்துடன் ஆட்சி செய்யும் ஒரு முன்மாதிரியான இடம் இது.' -இந்த வரிகளை எழுதியவர் யார் ?

A:-ஸ்ரீ நாராயண குரு

B:-சகோதரன் அய்யப்பன்

C:-குமார குருதேவன்

D:-சட்டம்பி சுவாமிகள்

Correct Answer:- Option-A

Question21:-

ஒரு படகில் ஏற்படும் எண்ணெய் தீயை அணைக்கப் பின்வருவனவற்றுள் எதைப் பயன்படுத்தலாம் ?

A:-நீர்

B:-நுரை வகை தீயணைப்பான் (Form type)

C:-சோடா அமிலத் தீயணைப்பான் (Soda acid)

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-B

Question22:-

யாரேனும் ஒருவர் படகிலிருந்து கீழே விழுந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் ?

A:-ஒரு உயிர்காக்கும் வளையத்தை வீச வேண்டும்

B:-விபத்து குறித்து மாஸ்டரிடம் (தலைவரிடம்) தெரிவிக்க வேண்டும்

C:-உந்துவிசையை (propeller) நிறுத்தி, படகைத் திருப்ப வேண்டும்

D:-மேற்கூறிய அனைத்தும்

Correct Answer:- Option-D

Question23:-

ஒரு நீர்வாகனத்தில் பணிபுரியும் போது நினைவில் கொள்ள

வேண்டிய விஷயங்கள்.

A:-பாதுகாப்பை உறுதி செய்தல்

B:-உயிர்காக்கும் உபகரணங்கள் மற்றும் தீயணைப்பான்கள் ஆகியவை நல்ல நிலையில் இயங்குகின்றன என்பதை உறுதி செய்தல்

C:-நீர்வாகனத்தை (watercraft) சுத்தமாக வைத்திருத்தல்

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-D

Question24:-

மற்றொரு நீர்வாகனத்தின் பார்வை எல்லைக்குள் இருக்கும் போது, ஒரு நீர்வாகனம் தனது திசையை வலதுபுறமாக மாற்றுகிறது என்பதைக் குறிக்கும் எச்சரிக்கை ஒலி சமிக்ஞை எது?

A:-ஒரு வினாடி கால அளவு உள்ள ஒரு சிறிய ஊதல் ஒலி

B:-இரண்டு சிறிய ஊதல் ஒலி

C:-மூன்று சிறிய ஊதல் ஒலி

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-A

Question25:-

படகின் இயந்திரம் இயங்கத் தொடங்கவில்லை. அதற்கான காரணம்

A:-ஸ்டார்டிங் மோட்டார் வேலை செய்யவில்லை

B:-மின்கலம் (battery) மின்னேற்றம் செய்யப்படவில்லை

C:-எரிபொருள் இயந்திரத்தை வந்தடையவில்லை

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-D

Question26:-

இந்தியாவின் தற்போதைய துணைக் குடியரசுத் தலைவர் யார் ?

A:-வெங்கையா நாயுடு

B:-ஹமீத் அன்சாரி

C:-ஜக்தீப் தன்கர்

D:-சி.பி. இராதாகிருஷ்ணன்

Correct Answer:- Option-D

Question27:-

மின்சாரத்தால் ஏற்படும் தீயை அணைக்க எந்த வகையான தீயணைப்பான் பயன்படுத்தப்படுகிறது ?

A:-நுரை வகை (Foam type)

B:-நீர்வகை (Water type)

C:-DCP (உலர் வேதியியல் தூள்)

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-C

Question28:-

ஒரு கடல் மைல் (nautical mile) என்பது எத்தனை கிலோமீட்டர்களுக்குச் சமம் ?

A:-1.852 கி.மீ.

B:- 1.0 கி.மீ.

C:-2.5 கி.மீ.

D:- 0.4 கி.மீ.

Correct Answer:- Option-A

Question29:-

கேரளாவின் முக்கியத் துறைமுகம் எது ?

A:-திருவனந்தபுரம்

B:-கொல்லம்

C:-கொச்சி

D:-கோழிக்கோடு

Correct Answer:- Option-C

Question30:-

கேரளாவின் மிக நீண்ட நதி எது ?

A:-சிந்து நதி

B:-பெரியாறு

C:-வேம்பநாடு ஏரி

D:-மேலே உள்ள எதுவும் இல்லை

Correct Answer:- Option-B

Question31:-

வாஸ்கோட காமா கேரளாவில் முதன் முதலில் எங்கு வந்திறங்கினார் ?

A:-காப்பாடு (கோழிக்கோடு)

B:-ஃபோர்ட் கொச்சி

C:-கோவா

D:-மேலே உள்ள எதுவும் இல்லை

Correct Answer:- Option-A

Question32:-

கடற்கரைப் பகுதியில் உயர் அலைகளும் தாழ் அலைகளும் ஏற்பட வழக்கமாக எவ்வளவு நேரம் ஆகும்?

A:-12 மணிநேரம்

B:-24 மணிநேரம்

C:-6 மணிநேரம்

D:-48 மணிநேரம்

Correct Answer:- Option-C

Question33:-கேரளாவின் நதிகளில் எவை கிழக்கு நோக்கிப் பாய்கின்றன ?

A:-கபினி, பவானி, பாம்பாறு

B:-கபினி, காவேரி, பெரியாறு

C:-பாம்பாறு, சாலியாறு, பெரியாறு

D:-கபினி, பவானி, மணிமலையாறு

Correct Answer:- Option-A

Question34:-

ஒரு இயந்திரப் படகு (motorized watercraft) இயங்கிக் கொண்டிருக்கும்போது, பின்வருவனவற்றில் எதற்கு வழிவிட வேண்டும் ?

A:-கட்டுப்பாடற்ற நிலையில் உள்ள படகிற்கு

B:-இயங்கும் திறன் குறைந்த நிலையில் உள்ள படகிற்கு

C:-மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள படகிற்கு

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-D

Question35:-

ஒரு படகின் பாதுகாப்பான வேகத்தைத் தீர்மானிக்கும் போது எவ்வெவற்றை கருத்தில் கொள்ள வேண்டும் ?

A:-பிற படகுகளின் இருப்பு உள்ளிட்ட போக்குவரத்துச் சூழல்கள்.

B:-பார்வைத்திறன் (visibility)

C:-காற்று மற்றும் நீரோட்ட நிலைகள், மற்றும் ஆபத்துக்கான வாய்ப்புகள்

D:- மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-D

Question36:-

ஒரு படகின் திசையைத் தீர்மானிக்கப் பயன்படும் கருவி எது ?

A:-இருகண் நோக்கி (Binocular)

B:-திசைகாட்டி (Compass)

C:-V.H.F.

D:-நங்கூரம் (Anchor)

Correct Answer:- Option-B

Question37:-

ஒரு கப்பல் அல்லது படகு துறைமுக மேடையில் (jetty) நிறுத்தப்படும்போது, அதைக் கட்டுவதற்குப் பயன்படும் கயிறாகச் செயல்பட, கரைநோக்கி வீசப்படும் எடை குறைந்த கயிறு எது?

A:-வீசும் கயிறு (Heaving line)

B:-விஞ்ச் (Winch)

C:-எஃகு கயிறு

D:-சாதாரண கயிறு

Correct Answer:- Option-A

Question38:-ஒரு படகின் இடது பக்கம் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

A:-Stern

B:-Stem

C:-Starboard side

D:-Port side

Correct Answer:- Option-D

Question39:-

அனைத்து நீர்வாகனங்களுக்கும் அவசியமானவை எவை ?

A:-உயிர்காக்கும் மேலுடை (Life jacket)

B:-உயிர்காக்கும் வளையம் (Life buoy)

C:-தீயணைப்பான்கள்

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-D

Question40:-

ஒரு நீர்வாகனம் மற்றொரு வாகனத்துடன் நேருக்கு நேர் மோதும்

சூழல் ஏற்படும்போது, அவை ஒன்றுக்கொன்று _______ திசையில் வழிவிட வேண்டும்.

A:-இடது புறம்

B:-வலது புறம்

C:-பின் புறம்

D:-இவை ஏதுமில்லை

Correct Answer:- Option-B

Question41:-

தீ பற்றிக் கொள்ளத் தேவைப்படுபவை எவை ?

A:-ஆக்ஸிஜன்

B:-எரிபொருள்

C:-வெப்பம்

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-D

Question42:-

கேரளாவில் சதுப்புநிலக் காடுகளைப் பாதுகாப்பதற்காகப் பணியாற்றியவர் யார் ?

A:-மயிலம்மா

B:-தசரத் மாஞ்சி

C:-தயா பாய்

D:-கல்லன் பொக்குடன்

Correct Answer:- Option-D

Question43:-

2022 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட தேசிய திரைப்பட விருதை வென்ற பின்னணிப் பாடகி யார் ?

A:-கே.எஸ். சித்ரா

B:-நஞ்சியம்மா

C:-இலா அருண்

D:-சாதனா சர்கம்

Correct Answer:- Option-B

Question44:-

நோபல் பரிசைப் பெற்ற முதல் ஆசிரியர் யார் ?

A:-சி.வி. ராமன்

B:-இரவீந்திரநாத் தாகூர்

C:-சுப்பிரமணிய சந்திரசேகர்

D:-மகாத்மா காந்தி

Correct Answer:- Option-B

Question45:-

'இந்தியாவின் ஏவுகணை மனிதர்' (Missile Man of India) என்று அழைக்கப்படுபவர் யார் ?

A:-டாக்டர் சி.வி. ராமன்

B:-நம்பி நாராயணன்

C:-டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம்

D:-டாக்டர் மாதவன் நாயர்

Correct Answer:- Option-C

Question46:-1 முதல் 100 வரையிலான எண்களுக்குள், '2' என்ற எண் எத்தனை முறை வருகிறது ?

A:-10

B:-20

C:-30

D:-இவை ஏதுமில்லை

Correct Answer:- Option-B

Question47:-$\frac{1}{1000}$ என்பதன் தசம வடிவ எண் எது ?

A:-0.001

B:- 0.01

C:-0.1

D:-0.03

Correct Answer:- Option-A

Question48:-

90 இன் (50%) என்பது என்ன ?

A:-180

B:-45

C:- 135

D:- 40

Correct Answer:- Option-B

Question49:-
(1/10) + (2/10) = ?

A:-3/100

B:-3/10

C:-3/20

D:- 2/100

Correct Answer:- Option-B

Question50:-
(1/2) + (1/4) = ?

A:-1/8

B:-2/4

C:- 3/4

D:-2/8

Correct Answer:- Option-C

Question51:-
90-இன் 1/6 பங்கு

A:-25

B:-B5

C:- 15

D:-20

Correct Answer:- Option-C

Question52:-

0.123-இன் பின்ன வடிவம்

A:-123/10

B:-123/100

C:-123/10000

D:-123/1000

Correct Answer:- Option-D

Question53:-

வட்டத்தின் மையம் என்பது ஒரு

A:-கோடு

B:-புள்ளி

C:-கதிர்

D:-கோட்டுத்துண்டு

Correct Answer:- Option-B

Question54:-

ஒரு கனசதுரத்தின் விளிம்புகளின் எண்ணிக்கை

A:-10

B:-8

C:-4

D:- 12

Correct Answer:- Option-D

Question55:-
140 செ.மீ. சுற்றளவு கொண்ட ஒரு சதுரத்தின் நீளம் 40 செ.மீ. எனில், அதன் அகலம் என்ன ?

A:-40 செ.மீ.

B:-20 செ.மீ.

C:-60 செ.மீ.

D:-30 செ.மீ.

Correct Answer:- Option-D

Question56:-ஒரு சதுரத்தின் ஒரு பக்கம் 10 செ.மீ. எனில், அதன் பரப்பளவு என்ன ?

A:-100 ச.மீ

B:-100 ச.மி.மீ

C:-100 ச.செ.மீ

D:-1000 ச.செ.மீ

Correct Answer:- Option-C

Question57:-
விரிகோணத்தின் அளவு

A:-$180^\circ$

B:-$45^\circ$

C:-$90^{\circ}$

D:-மேலே உள்ள எதுவும் இல்லை

Correct Answer:- Option-C

Question58:-

ஒரு இருசமபக்க முக்கோணத்தின் அடிப்பக்கம் 3 செ.மீ. மற்றும் செங்குத்து உயரம் 4 செ.மீ. எனில், அதன் கர்ணத்தின் நீளம் என்ன ?

A:- 4.5 செ.மீ.

B:- 5 செ.மீ.

C:- 4 செ.மீ.

D:-6 செ.மீ.

Correct Answer:- Option-B

Question59:-

இந்திய நாணயத்தாளில் யாருடைய கையொப்பம் இடம் பெற்றுள்ளது ?

A:-குடியரசுத் தலைவர்

B:-பிரதமர்

C:-நிதியமைச்சர்

D:-ரிசர்வ் வங்கி ஆளுநர்

Correct Answer:- Option-D

Question60:-

ஒரு சதுரத்தின் கோணங்களின் அளவுகளின் கூடுதல்

A:- 360

B:- 90

C:-180

D:- 270

Correct Answer:- Option-A

Question61:-

உலகச் செஸ் சாம்பியனான மேக்னஸ் கார்ல்சனை ஒரு ஆட்டத்தில் வீழ்த்திய இளம் இந்தியர் யார் ?

A:-விஸ்வநாதன் ஆனந்த்

B:- பி.வி. சிந்து

C:- ஆர். பிரக்ஞானந்தா

D:-இவர்களில் யாரும் இல்லை

Correct Answer:-Question Cancelled

Question62:-உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து கலங்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டிய சட்டம் எது ?

A:-உள்நாட்டு நீர்வழிச் கலச் சட்டம் (Inland Vessel Act)

B:-வணிகக் கப்பல் சட்டம் (Merchant Shipping Act)

C:-துறைமுக கிராஃப்ட் விதிகள் (Harbour Craft Rules)

D:-இவர்களில் எதுவும் இல்லை

Correct Answer:- Option-A

Question63:-

ஒரு நீர்வழி வாகனம் திசைதிருப்பப் பயன்படும் சுக்கான் (Rudder) எந்தப் பக்கத்தில் பொருத்தப்பட்டிருக்கும் ?

A:-அணியத்

B:-அமரத்

C:-இடது பக்கத்தில்

D:-வலது பக்கத்தில்

Correct Answer:- Option-B

Question64:-

ஒரு நீர்வழி வாகனம் இடதுபுறம் திரும்பும்போது அளிக்கப்படும் ஒலிச் சைகை எது ?

A:-ஒரு சிறிய ஊதல் ஒலி

B:-இரண்டு சிறிய ஊதல் ஒலிகள்

C:-மூன்று சிறிய ஊதல் ஒலிகள்

D:-நான்கு சிறிய ஊதல் ஒலிகள்

Correct Answer:- Option-B

Question65:-

ஒரு கப்பலின் கட்டுப்பாடு (இயக்கம்) எந்தப் பகுதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது ?

A:-புகைபோக்கி (Funnel)

B:-நங்கூரம் (Anchor)

C:-கப்பல் சக்கர அறை (Wheelhouse)

D:-பாய்மரம் (Mast)

Correct Answer:- Option-C

Question66:-
பிற வாகனங்கள் அல்லது துறைமுகத் தளங்களுடன் (Jetties) மோதும்போது ஏற்படும் சேதத்தைத் தடுக்க, நீர்வழி வாகனங்களின் பக்கவாட்டில் பயன்படுத்தப்படும், மெத்தை போன்ற சாதனம் எது ?

A:-வின்ச் (Winch)

B:-ஃபெண்டர் (Fender)

C:-போலார்ட் (Bollard)

D:-இவை ஏதுமில்லை

Correct Answer:- Option-B

Question67:-கேரள மாநிலத்தில் உள்ள மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை

A:-11

B:-15

C:-14

D:-இவை ஏதுமில்லை

Correct Answer:- Option-C

Question68:-
பி.ஆர். ஸ்ரீஜேஷ் (P. R. Sreejesh) எந்த தேசிய விளையாட்டைச் சார்ந்தவர் ?

A:-கிரிக்கெட்

B:-கால்பந்து

C:-கைப்பந்து

D:-ஹாக்கி

Correct Answer:- Option-D

Question69:-
கேரளாவில் எந்தத் துறைமுகத்தின் கட்டுமானப் பணிகள் அதானி குழுமத்திடம் (Adani Group) ஒப்படைக்கப்பட்டுள்ளன ?

A:-ஆலப்புழா

B:-விழிஞ்சம்

C:-பேப்பூர்

D:-கொல்லம்

Correct Answer:- Option-B

Question70:-தொலைவில் உள்ள பொருட்களைப் பார்க்க ______________ பயன்படுத்தப்படுகிறது.

A:-திசைகாட்டி (Compass)

B:-இருகண் நோக்கி (Binoculars)

C:-VHF

D:-நங்கூரம் (Anchor)

Correct Answer:- Option-B

Question71:-

ஒரு கப்பலின் மாஸ்டர் (Master) அல்லது பணியாளர்கள், எப்போது ஒரு சம்பவத்தை உடனடியாகக் காவல் துறைக்கோ அல்லது பிற பொறுப்புள்ள அதிகாரிகளுக்கோ தெரிவிக்க வேண்டும் ?

A:-விபத்தில் வேறொரு வாகனம் ஈடுபட்டிருந்தால்

B:-கப்பலில் பயணிக்கும் ஒருவர் உயிரிழந்தாலோ அல்லது காயமடைந்தாலோ

C:-தீ விபத்து ஏற்பட்டால்

D:-இவை அனைத்தும்

Correct Answer:- Option-D

Question72:-
25-க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிச் செல்லும் ஒரு நீர்வழிவாகனம், யாருடைய மேற்பார்வையின் கீழ் இருக்க வேண்டும் ?

A:-மாஸ்டர் (Master)

B:-பொறியாளர் (Engineer)

C:-ஓட்டுநர் (Driver)

D:-லஸ்கர் (Lascar)

Correct Answer:- Option-A

Question73:-
ஒரு நீண்ட கயிற்றின் நீளத்தைக் குறைக்க எந்த முடிச்சு (hitch) பயன்படுத்தப்படுகிறது ?

A:-Clove hitch

B:-Timer hitch

C:-Sheepshank hitch

D:-Marline sled hitch

Correct Answer:- Option-C

Question74:-
வானிலை காரணமாகப் பார்வைத் திறன் குறைவாக உள்ள நேரங்களில், முன்னால் செல்லும் பாதையில் வேறு கப்பல்கள் ஏதேனும் உள்ளனவா என்பதை அறியப் பயன்படும் சாதனம் எது ?

A:-VHF

B:-AIS

C:-GPS

D:-RADAR

Correct Answer:- Option-D

Question75:-
ஒரு வாகனத்தின் 'Draft' (நீர்மட்டம்) அதிகரிக்கும்போது, அதன் 'Freeboard' (நீர்மட்டத்திற்கு மேலுள்ளபகுதி) ______________

A:-குறைகிறது

B:-அதிகரிக்கிறது

C:-மாறாமல் இருக்கிறது

D:-இவை ஏதுமில்லை

Correct Answer:- Option-A

Question76:-
கேரளாவின் மிகப்பெரிய மீன்பிடி மையம் எது ?

A:-நீண்டகரை

B:-கொச்சி

C:-முனம்பம்

D:-பேப்பூர்

Correct Answer:- Option-A

Question77:-

$\frac{4}{3}$-க்குச் சமமானது எது ?

A:-$4\frac{1}{3}$

B:-$1\frac{1}{3}$

C:-$3\frac{1}{3}$

D:-$1\frac{1}{4}$

Correct Answer:- Option-B

Question78:-

பின்வருவனவற்றுள் எது $\frac{1}{2}$-க்குச் சமமானது ?

A:-$\frac{50}{100}$

B:-$\frac{25}{45}$

C:- $\frac{7}{70}$

D:- $\frac{8}{4}$

Correct Answer:- Option-A

Question79:-

இந்தியாவில் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவதற்கான குறைந்தபட்ச வயது

A:- 35

B:- 25

C:- 18

D:-21

Correct Answer:- Option-A

Question80:-

தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரத்தில் எத்தனை ஆரக்கால்கள் (spokes) உள்ளன ?

A:- 12

B:-8

C:- 24

D:- 20

Correct Answer:- Option-C

Question81:-

ஒரே அளவிலான கயிறுகளை ஒன்றாக இணைக்க __________ பயன்படுத்தப்படுகிறது.

A:- ஓவர்ஹேண்ட் முடிச்சு (Overhand knot)

B:- எட்டு வடிவ முடிச்சு (Figure of eight knot)

C:- ரீஃப் முடிச்சு (Reef knot)

D:- க்ளோவ் ஹிட்ச் (Clove hitch)

Correct Answer:- Option-C

Question82:-

மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் கப்பல்கள் அல்லது படகுகள் ஒளிரச் செய்ய வேண்டிய விளக்குகள் எவை ?

A:-மேலே சிவப்பு விளக்கும், கீழே வெள்ளை விளக்கும் கொண்ட அனைத்துப் பக்கமும் ஒளிரும் விளக்குகள்

B:- சிவப்பு விளக்கு கொண்ட, அனைத்துப் பக்கமும் ஒளிரும் இரண்டு விளக்குகள்.

C:-மஞ்சள் விளக்கு கொண்ட, அனைத்துப் பக்கமும் ஒளிரும் இரண்டு விளக்குகள்.

D:-மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

Correct Answer:- Option-A

Question83:-

நீர்வாகனங்களில் ஆழத்தை அளவிடப் பயன்படும் கருவி எது ?

A:- எக்கோசவுண்டர் (Echosounder)

B:-VHF

C:-பைனாகுலர் (Binocular)

D:-நங்கூரம் (Anchor)

Correct Answer:- Option-A

Question84:-

சுற்றுலாப் பயணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் நீர்வாகனங்கள் மற்றும் படகுகள் எந்த வகுப்பு/வகையைச் சேர்ந்தவை ?

A:-வகுப்பு 1

B:-வகுப்பு 2

C:-வகுப்பு 3

D:-வகுப்பு 4

Correct Answer:-Question Cancelled

Question85:-பின்வரும் மாவட்டங்களில் எதற்கு கடற்கரையே இல்லை ?

A:-கண்ணூர்

B:-பாலக்காடு

C:-மலப்புரம்

D:-கொல்லம்

Correct Answer:- Option-B

Question86:-கடலிலிருந்து முகத்து வாரத்திற்குள் நுழையும்போது, கூம்பு மற்றும் பீப்பாய் வடிவங்களில் ஆழமான நீர்வழிகளைக் குறிக்க நிறுவப்பட்டுள்ள மிதவைகளில், இடதுபுறத்தில் காணப்படும் பீப்பாய் வடிவ மிதவைகளின் நிறம் என்ன ?

A:-பச்சை

B:-சிவப்பு

C:-மஞ்சள்

D:-வெள்ளை

Correct Answer:- Option-B

Question87:-நீர்த்தளத்தின் தரையில் இழுவை வலை (trawl net) அல்லது அது போன்ற கருவிகளை இழுத்து மீன்பிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு கப்பல், சட்டப்படி தேவைப்படும் பிற விளக்குகளுடன் கூடுதலாக, செங்குத்து வரிசையில் இரண்டுக்கு மேற்படாத அனைத்துத் திசைகளிலும் ஒளிரும் விளக்குகளைக் காட்சிப்படுத்த வேண்டும். பின்வருவனவற்றில் அவை எவை ?

A:-பச்சை மற்றும் வெள்ளை

B:-இரண்டு சிவப்பு

C:-இரண்டு பச்சை

D:-சிவப்பு மற்றும் வெள்ளை

Correct Answer:- Option-A

Question88:-

ஒரு கூர்மையானவளைவில் மற்ற நீர்வாகனங்களை எச்சரிக்க, நீங்கள் உங்கள் விசில் (whistle) மூலம் எவ்வளவு நேரம் ஊத வேண்டும் ?

A:-ஒரு நீண்ட ஊதல்

B:-இரண்டு நீண்ட ஊதல்கள்

C:-மூன்று நீண்ட ஊதல்கள்

D:-நான்கு ஊதல்கள்

Correct Answer:- Option-A

Question89:-ஒரு நீர்வாகனம் மற்றொரு நீர்வாகனத்தின் இடதுபுறத்தில் இருக்கும்போது, அதை முந்திச் செல்ல விரும்புவதைக் குறிக்க, எத்தனை சிறிய மற்றும் பெரிய விசில் ஒலிகளை எழுப்ப வேண்டும் ?

A:-1+1

B:-4+4

C:-2+2

D:-3+3

Correct Answer:- Option-C

Question90:-இயங்கும் திறன் குறைவாக உள்ள (limited mobility) ஒரு கப்பல் காட்சிப்படுத்த வேண்டிய விளக்குகள் எவை ?

A:-செங்குத்து நிலையில் இரண்டு சிவப்பு விளக்குகள்

B:-அனைத்துத் திசைகளிலும் ஒளிரும் விளக்குகள்; செங்குத்து நிலையில், மேலே மற்றும் கீழே சிவப்பு விளக்குகளும், நடுவில் வெள்ளை விளக்கும் அமைந்திருத்தல்

C:-செங்குத்து நிலையில் இரண்டு வெள்ளை விளக்குகள்

D:-இவை ஏதுமில்லை

Correct Answer:- Option-B

Question91:-

ஒரு நீர்வாகனத்தின் இயந்திரத்தை இயக்குவதற்கு முன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் எவை ?

A:-இயந்திர எண்ணெயின் (engine oil) அளவு மற்றும் நிறத்தைச் சரிபார்க்கவும்.

B:-ரேடியேட்டரில் உள்ள நீரின் அளவைச் சரிபார்க்கவும்.

C:-கியர் (Gear) இணைக்கப்பட்டுள்ளதா எனச் சரிபார்க்கவும்.

D:-மேலே உள்ள அனைத்தும்

Correct Answer:- Option-D

Question92:-கேரளாவின் மிகப் பெரிய ஏரி

A:-அஷ்டமுடி ஏரி

B:-சாஸ்தம் கோட்டா ஏரி

C:-வேம்பநாடு ஏரி

D:-பம்பையார்

Correct Answer:- Option-C

Question93:-
முசிரிஸ் (Muziris) என்று அழைக்கப்பட்ட துறைமுக நகரம்

A:-விழிஞ்சம்

B:-புரக்காடு

C:-தங்கசேரி

D:-கொடுங்கல்லூர்

Correct Answer:- Option-D

Question94:-

கேரளாவின் கடல் எல்லை எத்தனை கடல் மைல்கள் வரை நீண்டுள்ளது ?

A:-24

B:-50

C:-12

D:-200

Correct Answer:- Option-C

Question95:-

கப்பல்களுக்கு இடையேயும், கப்பல்களுக்கும் நிலப்பகுதிக்கும் இடையேயும் தொடர்பு கொள்ளப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் தகவல் தொடர்பு சாதனம்

A:-எக்கோசவுண்டர் (Echosounder)

B:-ரேடார் (Redar)

C:-VHF

D:-GPS

Correct Answer:- Option-C

Question96:-

நங்கூரமிட்டு நிற்கும் 20 மீட்டருக்கும் அதிகமான நீளமுள்ள கப்பல்கள் காட்சிப்படுத்த வேண்டிய சமிக்ஞை

A:-பச்சை மற்றும் சிவப்பு விளக்கு

B:-கப்பலின் பின்பகுதியில் அனைத்துத் திசைகளிலும் ஒளிரும் வெள்ளை விளக்கு மற்றும் பகல் நேரத்தில் ஒரு கருப்பு உருண்டை

C:-மஞ்சள் விளக்கு மற்றும் கருப்பு உருண்டை

D:-இவை அனைத்தும்

Correct Answer:- Option-B

Question97:-
கடல் அல்லது நீரில் ஒரு நீர்வழிப் போக்குவரத்துக் கலத்தைப் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப் பயன்படுவது.

A:-டெரிக் (Derrick)

B:-வின்ச் (Winch)

C:-நங்கூரம் (Anchor)

D:-கப்பல் உடல்/கூடு (Hull)

Correct Answer:- Option-C

Question98:-ஒரு நீர்வழிப் போக்குவரத்துக் கலம் வலதுபுறம் திரும்பும்போது கொடுக்கப்பட வேண்டிய ஒலி சமிக்ஞை

A:-ஒரு சிறிய ஊதல் ஒலி

B:-இரண்டு சிறிய ஊதல் ஒலிகள்

C:-மூன்று சிறிய ஊதல் ஒலிகள்

D:-இவை எதுவும் இல்லை

Correct Answer:- Option-A

Question99:-

ஒரு கப்பல் பின்னோக்கி நகர்வதற்கு கொடுக்கப்பட வேண்டிய ஒலி சமிக்ஞை

A:-இரண்டு சிறிய ஊதல் ஒலிகள்

B:-மூன்று சிறிய ஊதல் ஒலிகள்

C:-ஐந்து சிறிய ஊதல் ஒலிகள்

D:-நான்கு சிறிய ஊதல் ஒலிகள்

Correct Answer:- Option-B

Question100:-கேரளாவில் பாய் கப்பல் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் துறைமுகம் எது ?

A:-கொல்லம்

B:-கொச்சி

C:-பேப்பூர்

D:-மலப்புரம்

Correct Answer:- Option-C